837

உ

உலகநாதன் அருளிய

உலகநீதி.

(மூலமும்—உரையும்)

எஸ். ஆண்டியப்ப முதலியார்.
புக்ஸெல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,
சோழவந்தான்.

காபிரைட்] — [விலை பைசா 9.

1928.

உ

உலகநீதி.

(மூலமும்-உரையும்)



எஸ். ஆண்டியப்ப முதலியார்,
புக்ஸெல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,
சோழவந்தான்.

மதுரை, ஸ்ரீ ஜகதாம்பாள் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 1928. [விலை 9 பை.

நூலாசிரியர் வரலாறும் நூலின் சிறப்பும்.

———:(ஐ):———

உலகநாதன்:— இவர் நாடு, ஊர், காலம் ஒன்றும் அறிய முடியாவிடினும், இவர் செய்த நூலால் இவரைப் பற்றிய சில குறிப்புகள் புலனாகின்றன. அவையாவன:— சிறிய இனியசொற்களால் அறிய பெரிய விஷயங்களை எடுத்துக் கூறுதல், மாணவர்களை இளமையிலேயே நல்வழியில் கொண்டுவரவேண்டுமென்ற உண்மை, பெரிய விஷயங்களை இனிய செய்யுட்களால் மாணவர்க்கு எடுத்துக்கூறும் திறன், பொய்யடிமையில்லா மெய்யடியாரிடத்துக் கொண்ட அன்பு, தெய்வபக்தியுடைமை முதலிய இவைபோல்வன பலவாம். இவ்வாசிரியரது செய்யுட்களின் பொருளாழத்தைக் கண்டு பலரும் இவர் செய்த உலகநீதி யென்னும் இந்நூலை ஔவைப் பாட்டியார் செய்ததாகவே கூறுவர். அங்ஙனம் கூறுதல் பொருந்தாமை, அந்நூலின் கடைசி விருத்தமாகிய 'ஆதரித்து' என்னும் முதற் குறிப்புடைய செய்யுளில் 'ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன் பாடிவைத்த உலகநீதி' என்றிருப்பதைக் கண்டு உணர்க.

உரையாசிரியன்.

3 AUG 1928
MADRAS

உலகநாதன் அருளிச்செய்த

உலகநீதி.

(மூலமும்-உரையும்)



காப்பு.

உலக நீதிப் புராணத்தை யுரைக்கவே
கலேக ளாய்வரும் கரிமுகன் காப்பு.

(பதவுரை) உலகநீதி-உலகநீதி என்ற பெயரை யுடைய, புராணத்தை- பழமையான சங்கதியை, உரைக்க-நான் எடுத்துச் சொல்லுதற்கு, கலேகள்-பல நூல்களாலும், ஆய்வுஅரும்-ஆராய்வதற்கு அருமையான, கரிமுகன்- யானைமுகத்தையுடைய விநாயகர், காப்பு-எனக்குக்காவலாய் இருப்பாராக.

(கருத்துரை) இந்நூலையினிது முடித்தற்கு விநாயகர் காவலாய் இருப்பாராக.

(1) 1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள்செய்வாரோடு இணங்க வேண்டாம்

5. போகாத இடந்தனிலே போக வேண்டாம்
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
7. வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளே வாழ்த்தாய் நெஞ்சே.

(ப-ரை) (1) ஒருநாளும்-எந்தக்காலத்திலும். ஓதாமல்-நூல்களைப்படிக்காமல், இருக்கவேண்டாம்-(பொழுதை வீணுகப்போக்கி) இருக்கக்கூடாது.

(ப-ரை) (2) ஒருவரையும்-யார்மீதேனும், பொல்லாங்கு-கொடியகுற்றங்களை, சொல்லவேண்டாம்- சொல்லக்கூடாது.

(ப-ரை) (3) மாதாவை-உன்னைப்பெற்றதாயாரை, ஒரு நாளும்-எப்பொழுதும், மறக்கவேண்டாம்- மறக்கக்கூடாது.

(ப-ரை)(4) வஞ்சனைகள்-கொடிய காரியங்களை,செய்வாரோடு-செய்யும் மனிதருடன், இணங்கவேண்டாம்- சிநேகிக்கக்கூடாது.

(ப-ரை) (5) போகாத-போதற்குப் பொருத்தமில்லாத, இடந்தனிலே-இடத்திற்கு, போக வேண்டாம்-போகக்கூடாது.

(ப-ரை) (6) போகவிட்டு-(ஒருவனைச்) செல்லும்படி விட்டிலிட்டு, புறஞ்சொல்லி-(பிறகு அவனை) நிந்தையாகச் சொல்லி, திரிய வேண்டாம்-வீணே அலையக் கூடாது.

(ப-ரை) (7) வாகுஆரும்-அழகு பொருந்தியிருக்கிற, குறவருடை-குறவருடைய (பெண்ணுகிய) வள்ளி-வள்ளி யம்மையாருக்குப் பங்கன்- நாயகனுகிற, மயிலேறும் பெருமாளே-மயிலேவாகனமாய்க் கொண்ட முருகக்கடவுளே, நெஞ்சே- எ, மனதே, வாழ்த்தாய்- நீ போற்றி வணங்குவாயாக.

(க-ரை) எ, மனதே. நூல்களைப்படி, ஒருவரைக்குறை கூறாதே தாயை மறந்துவிடாதே, வஞ்சகருடன் சேராதே, புதிய இடத்திற்குப் போகாதே- ஒருவரை நிந்திக்காதே, சதா முருகனே வணங்கு என்பதாம்.

(2) 1. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
2. நிலையில்லாக் காரியத்தைச் செய்ய வேண்டாம்
3. நஞ்சுடனே ஒரு நாளும் பழகவேண்டாம்
4. நல்இணக்கம் இல்லாரோடுஇணங்க வேண்டாம்
5. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
6. அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்
7. மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானே வாழ்த்தாய் நெஞ்சே

(ப-பை) (1) நெஞ்சு ஆர- நெஞ்சு அறிந்த, பொய்தன்னை- உண்மையில்லாத விஷயங்களை, பேசவேண்டாம்- பேசக்கூடாது.

(ப-பை) (2) நிலை இல்லா-நிலைபெறுத, காரியத்தை-காரியங்களை, செய்யவேண்டாம்-(நிலையுள்ளது என்று எண்ணி) செய்யக்கூடாது.

(ப-பை) (3) நஞ்சுடனே - விஷத்தையுடைய ஜந்துக்களோடு ஒருநாளும்- எப்பொழுதும், பழகவேண்டாம்-பழகக்கூடாது.

(ப-பை) (4) நல்இணக்கம்-சிநேகித்தற்குரிய பொருத்தம், இல்லாரோடு- இல்லாதவருடன், இணங்கவேண்டாம்-சேரக்கூடாது.

(ப-பை) (5) அஞ்சாமல்-எதற்கும்பயப்படாமல், தனிவழியே-மனிதர் சஞ்சாரமில்லாத பாதையில், போகவேண்டாம்-செல்லக்கூடாது.

(ப-பை) (6) அடுத்தவரை- தஞ்சமென்று உன்னை நெருங்கியிருப்பவரை, ஒருநாளும்-எப்பொழுதும், கெடுக்கவேண்டாம்-கெடுக்கக்கூடாது.

(ப-பை) (7) மஞ்சு ஆரும்-அழகு பொருந்திய, குறவருடை-குறவரது மகளாகிய, வள்ளி-வள்ளியம்மைக்கு, பங்கன்-நாயகனுகிற, மயிலேறும் பெருமானே-மயிலேவாகனமாகக்கொண்ட முருகக்கடவுளே நெஞ்சே-ஏ, மனதே, வாழ்த்தாய்- நீ வணங்குவாயாக.

(க-பை) ஏ, மனதே! பொய்கூறாதே. நிலையில்லாக் காரியத்தை நிலைக்கச் செய்யாதே, கொடிய ஜந்துக்களுடன் கூடாதே, அயோக்கியரோடு சேராதே, துணையின்றிச் செல்லாதே, அடுத்தவரைக் கெடுக்காதே, முருகக்கடவுளை வணங்கு.

(3) 1. மனம்போனபோக்கெல்லாம் போக வேண்டாம்
2. மாற்றானே உறவென்று நம்ப வேண்டாம்
3. தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டாம்
4. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
5. சினந்தேடி அல்லலையும் தேட வேண்டாம்
6. சினத்திருந்தார் வாசல்வழி சேர வேண்டாம்
7, வனம்தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானே வாழ்த்தாய் நெஞ்சே

(பதம்) (1) மனம்-தன்மனமானது, போன-செல்லும்படியான, போக்கு எல்லாம்-மார்க்கங்களில் எல்லாம், போகவேண்டாம்-போகக்கூடாது.

(பதம்) (2) மாற்றானே-தன்னுடைய விரோதியை, உறவு என்று-அன்புள்ளவன் என்று, நம்பவேண்டாம்-நம்பக்கூடாது.

(பதம்) (3) தனந்தேடி-ஐசுவரியத்தைச் சேகரித்து, உண்ணுமல்-தான்சாப்பிட்டு அனுபவியாமல், புதைக்க வேண்டாம்-மண்ணில் புதைத்து வைக்கலாகாது.

(பதம்) (4) தருமத்தை-தருமம்கொடுப்பதை, ஒருநாளும்-எப்பொழுதும், மறக்கவேண்டாம்-மறந்து விடலாகாது.

(பதம்) (5) சினம் தேடி-கோபத்தை மேற்கொண்டு, அல்லலையும்-பலவகையான கஷ்டங்களையும், தேடவேண்டாம்-தேடிக்கொள்ளாதே.

(பதம்) (6) சினத்து-உன்னிடத்துக் கோபத்துடன், இருந்தார்-இருந்தவருடைய, வாசல்வழி-வீட்டுவழிப்பக்கமும், சேரவேண்டாம்-செல்லக்கூடாது.

(பதம்) (7) வனம்-காட்டினையே, தேடும் விரும்பிச் சுற்றுகின்ற, குறவருடை-குறவரது மகளாகிய, வள்ளி-வள்ளியம்மையாருக்கு, பங்கன்-நாயகனுகிய, மயிலேறும் பெருமானே-மயில் வாகனமாய்க் கொண்ட முருகப்பிரானே, நெஞ்சே-ஏ மனமே! வாழ்த்தாய்-நீ வணங்குவாயாக.

(கருத்து) ஏ மனமே! மனம்போன வழியில்போகாதே. பகைவனே நம்பாதே தேடியபொருளையனுபவி. தருமத்தை யெப்பொழுதுஞ்செய் அடுத்தவரைக் கோபிக்காதே, கோபம் உள்ளவரிடம் போகாதே, முருகனே வணங்கு என்பதாம்.

(4) 1. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
2. கோலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
3. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
4. கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
5. கொற்றவனே டெதிர்மாறு கூற வேண்டாம்
6. கோயிலில்லா வூரிற்குடி இருக்க வேண்டாம்
7. மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானே வாழ்த்தாய் நெஞ்சே.

(ப-ரை) (1) குற்றம் ஒன்றும்-பிறருடைய குற்ற மொன்றையும் பாராட்டி-எடுத்துச் சொல்லிக் கொண்டு, திரியவேண்டாம்-அலைய கூடாது.

(ப-ரை) (2) கொலை- உயிர்களைக் கொல்லுதலும், களவு-பிறர் பொருளைத்திருடுதலும். செய்வாரோடு - செய்பவருடன், இணங்க வேண்டாம்-சேரக்கூடாது.

(ப-ரை) (3) கற்றவரை- நூல்களைப்படித்தவரை, ஒருநாளும்- எப்பொழும், பழிக்க வேண்டாம்-நிந்திக்கக்கூடாது.

(ப-ரை) (4) கற்புடைய- கற்புள்ள, மங்கையரை- பெண்களை, கருதவேண்டாம்-நெடுதலாய் நினைக்கவேண்டாம்.

(ப-ரை) (5) கொற்றவனோடு - பூமியையாளும் அரசனுடன், எதிர்மாறு-பகையையுண்டுபண்ணுஞ் சொற்களை, பேசவேண்டாம்-பேசக்கூடாது.

(ப-ரை) (6) கோயில் இல்லா-திருக்கோயில் இல்லாத - ஊரில்-வூரிலே, குடியிருக்கவேண்டாம்-வாசஞ்செய்யக்கூடாது.

(ப-ரை) (7) மற்றுநிகர்- உவமை வேறு, இல்லாத- டைக்கப் பெறாத, வள்ளி- வள்ளியம்மையாருக்கு, பங்கன்-நாயகனாகிய, மயிலேறும் பெருமானே-மயிலே வாகனமாய்க் கொண்ட முருகப்பிரானை, நெஞ்சே ஏ! மனமே! வாழ்த்தாய்-வணங்குவாயாக.

(க-ரை) ஏ மனதே! பிறருடைய குற்றத்தைப் பேசாதே, கெட்டவரோடு சேராதே, கற்றவரை இகழாதே, பிறர் பெண்களை நினைக்காதே. அரசன் சொல்லுக்கு அடங்கி நட, கோயிலில்லா ஊரில் இருக்காதே. முருகனை வணங்கு.

(5) 1. வாழாமல் பெண்ணைவைத்துத் திரியவேண்டாம்
2. மனையாளைக் குற்றமொன்றும்சொல்லவேண்டாம்
3. வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
4. வேஞ்சமரில் புறங்கொடுத்து மீள வேண்டாம்
5. தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்
6. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
7. வாழ்வாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

(ப-ரை) (1) வாழாமல்-கணவனுடன் இருந்து வாழவிடாதபடி, பெண்ணை- உன்னுடைய பெண்ணை வைத்து-உன் வீட்டில் வைத்துக்கொண்டு, அலையவேண்டாம்-துன்பப்படாதே.

(ப-ரை) (2) மனையாளை- உன் மனைவியின்மீது, குற்றம் ஒன்றும்-துன்பத்தைக் கொடுக்கும் வார்த்தை யொன்றுயினும், சொல்ல வேண்டாம்-சொல்லக்கூடாது.

(ப-ரை) வீழாத-விழத்தகாத, படுகுழியில்-ஆழமான பள்ளத்திலிருக்கும் வெள்ளத்தில், வீழவேண்டாம்-விழுந்து விளையாடலாகாது.

(ப-ரை) (4) வெம் சமரில்-கொடிய யுத்தகளத்தில், புறங்கொடுத்து-புறங்காட்டி, மீளவேண்டாம்-திரும்பலாகாது.

(ப-ரை) (5) தாழ்வு ஆன-மிகவும் கேவலமான, குலத்துடனே-சாதியாரோடு, சேரவேண்டாம்-கூடலாகாது.

(ப-ரை) (6) தாழ்ந்தவரை- உனக்கு அடிமையாயிருப்பவரிடத்து, பொல்லாங்கு-கொடிய சொற்களை, சொல்லவேண்டாம்-சொல்லலாகாது.

(ப-ரை) (7) வாழ்வு ஆரும்- சுகவாழ்வோடு கூடிய, குறவருடை-குறவரது பெண்ணுகிய, வள்ளி- வள்ளியம்மையாருக்கு, பங்கன்- காயகனுகிய, மயிலேறும் பெருமாளை-மயில வாகனமாய்க்கொண்ட முருகனை, நெஞ்சே-மனமே, வாழ்த்தாய்- நீ வணங்குவாயாக

(க-ரை) உனது மகளை புருஷனேடு சேர்ந்து வாழச்செய். பெண்சாதியின்மீது வீண் குற்றம் சுமத்தாதே. படுகுழிகளிலிறங்காதே. யுத்தத்தில் பின்வாங்காதே. கீழானவருடன் சேராதே, நஞ்சமென்றறிந்தவரை வருத்தாதே முருகனை வணங்கு.

(6) 1. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்
2. மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் ாடாம்
3. மூத்தோர்சொல்வார்த்தைதனைமறக்கவேண்டாம்
4. முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
5. வாத்தியார் கூலியை வைத்திருக்கவேண்டாம்
6. வழிபறித்துத் திரிவாரோ டிணங்கவேண்டாம்
7. சேர்த்தபுகழாளனொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் சேப்பாய் நெஞ்சே

(ப-ரை) (1) வார்த்தை-வீண் பேச்சுகளை, சொல்வார்-சொல்ப வருடைய, வாய்பார்த்து-வாயைப் பார்த்துக்கொண்டு, திரியவேண் டாம்-திரியக்கூடாது.

(ப-ரை) (2) மதியாதார்-உன்னை மதியாதவருடைய, தலைவா சல்-வீட்டு வாசல்படியிலும், மிதிக்கவேண்டாம்-செல்லலாகாது.

(ப-ரை) (3) மூத்தோர்-கற்றறிந்த பெரியோர், சொல்- சொல் லும்படியான, வார்த்தை தன்னை-வார்த்தைகளை, மறக்கவேண்டாம்-மறக்கலாகாது.

(ப-ரை) (4) முன்கோபக்காரரோடு- காரணமில்லாது கோபிப் பவருடன், இணங்கவேண்டாம்-சேரலாகாது.

(ப-ரை) (5) வாத்தியார்-உன்குருவினுடைய, கூலியை(கொடுக் கவேண்டிய) சம்பளத்தை, வைத்திருக்கவேண்டாம்-கொடுக்காமல் இருக்கலாகாது.

(ப-ரை) (6)வழிபறித்து-வழியிற்செல்வோர் பொருளாயபகரித் து,திரிவாரோடு திரிகின்றவருடன்,இணங்கவேண்டாம் சேரலாகாது

(ப-ரை) (7) சேர்த்த-சேகரித்துக் கொண்ட, புகழாளன்-கீர்த் தியையுடையவனை, ஒருவள்ளி-ஒப்பற்ற வள்ளியம்மையாரின், பங் கன்-காதலனாகிய திருக்கை வேலாயுதனை-வேலாயுதக்கரத்தை அழகிய கையையுடைய முருகனை,நெஞ்சே-ஏமனமே!செப்பாய்-புகழ்வாயாக.

(க-ரை) மனமே! பயனற்ற வார்த்தைகளைக் கேட்காதே. மதி யாதார் மனைக்குப் போகாதே. பெரியோர் சொல்லுக்கு மீறாதே. கோபிகளுடன் சேராதே உபாத்தி[illegible]க்கு கொடுக்க வேண்டிய வற்றைத்தவறாமல் கொடு. [illegible] சேராதே. முருகனை [illegible] ர வாழ்த்துவாயாக.

153878

(7) 1. கருதாமல் கருமங்கள் முடிக்கவேண்டாம்
2. கணக்கழிவை ஒருநாளும் பேசவேண்டாம்
3. பொருவார்தம் போர்க்களத்தில் போகவேண்டாம்
4. பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்கவேண்டாம்
5. இருதாரம் ஒருநாளும் கொள்ளவேண்டாம்
6. எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்
7. குருகாரும் புனங்காக்கும் வள்ளி பங்கன்
குமரவேல் பாதத்தைக் கூறாய் நெஞ்சே.

(ப-ரை) (1) கருதாமல்-கன்கு யோசனை செய்யாமல், கருமங்கள்-எந்தக் காரியங்களையும், முடிக்கவேண்டாம்-முடிக்கக்கூடாது.

(ப-ரை) (2) கணக்கழிவை-முன் கடந்த விஷயத்தைப்பற்றி, ஒருநாளும்-எந்தக்காலமும், பேசவேண்டாம்-ஒருவரிடமும் பேசலாகாது.

(ப-ரை) (3) பொருவார்தம்-யுத்தஞ் செய்பவருடைய, போர்க்களத்தில்-யுத்தகளத்திலே, போகவேண்டாம்-செல்லலாகாது.

(ப-ரை) (4) பொது நிலத்தில்-பலர்க்கும் உரிமையுள்ள இடத்தில், ஒருநாளும்-எப்பொழுதும், இருக்கவேண்டாம்-தங்கலாகாது.

(ப-ரை) (5) இருதாரம்-இரண்டு மனைவியரை, ஒருநாளும்-எப்பொழுதும், கொள்ளவேண்டாம்-விவாகம் செய்துகொள்ளாதே.

(ப-ரை) (6) எளியாரை-கீழானவரோடு, எதிரிட்டு-விரோதஞ் செய்து, கொள்ளவேண்டாம்-பழியையடையாதே.

(ப-ரை) (7) குருகு ஆரும்-குருகு என்கின்ற பக்ஷிகள் பொருந்தியிருக்கின்ற, புனம்காக்கும்-தினைப்புனத்தைக் காவல்செய்கின்ற, எழைபங்கன்-வள்ளியம்மையாரின் நாயகனாகிய, குமரவேல்-முருகக் கடவுளது, பாதத்தை-திருவடிகளை, நெஞ்சே ஏ மனமே!, கூறாய்-புகழ்வாயாக.

(க-ரை) ஆலோசனைசெய்து ஒரு காரியத்தைச் செய். கழிந்த விஷயத்தைப்பற்றிப் பேசாதே. சண்டையிடுவோரிடத்திற்குச் செல்லாதே. பலர்க்கும் உரிமையுள்ள இடத்தில் இருக்காதே. இரு பெண்ணை மணக்காதே. எழையோடு விரோதிக்காதே. முருகனையே வணங்கு.

(8) 1. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
2. செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
3. ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
4. உற்றுரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
5. பேரான காரியத்தை தவிர்க்க வேண்டாம்
6. பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
7. வாராரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளே வாழ்த்தாய் நெஞ்சே.

(ப-ரை) (1) சேராத-யோக்கியதை யில்லாத, இடந்தனிலே-இடங்களிற்சென்று, சேரவேண்டாம்-சேர்ந்திருக்கலாகாது.

(ப-ரை) (2) செய்தநன்றி-ஒருவர் உனக்குச்செய்த உதவியை. ஒருநாளும்-எப்பொழுதும், மறக்கவேண்டாம் - மறந்துவிடலாகாது,

(ப-ரை) (3) ஊரோடும்-ஊரிலிருப்பவருடன், குண்டுணியாய்-கோள் சொல்பவனுய, திரியவேண்டாம்-திரியக்கூடாது.

(ப-ரை) (4) உற்றுரை-உனது சுற்றத்தார்களே, உதாசினங்கள்-கேவலமான சொற்களால், சொல்லவேண்டாம்-பேசலாகாது.

(ப-ரை) (5) பேர்ஆன காரியத்தை-அவசியம் செய்து முடிக்க வேண்டிய காரியங்களே, தவிர்க்க வேண்டாம்-செய்யாதிருக்காதே.

(ப-ரை) (6) பிணைபட்டு- ஒருவனது இன்ப துன்பங்களில் கூடுபட்டு, துணைபோகி-நீ உபகாரியாய்ச் சென்று, அலைய வேண்டாம்-அலையக்கூடாது.

(ப-ரை) (7) வார்ஆரும்-கீர்த்தி மிகுந்த, குறவருடை-குறவாது பெண்ணுகிய, வள்ளிபங்கள்- வள்ளியம்மையாரின் நாயகனுகிய, மயிலேறும் பெருமாளே- மயிலேவாகனமாய்க்கொண்ட முருகனே, நெஞ்சே-ல மனமே! வாழ்த்தாய்-வணங்குவாயாக.

(க-ரை) ஒழுக்க மில்லாதார் இடத்திற்குப் போகாதே. பிறர்மீது கோள் கூறாதே. சுற்றத்தைப் பழிக்காதே. செய்யத்தகுந்த காரியத்தைச் செய்துவிடு. எந்த விஷயத்திலும் தலைக்கொடுக்காதே. முருகனே வணங்கு. என்பதாம்.

(9) 1. மண்ணின்று மண்ணேரம் சொல்ல வேண்டாம்
2. மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்
3. கண்ணழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்
4. காணுதவார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
5. புண்படவேவார்த்தைகளைச் சொல்லவேண்டாம்
6. புறஞ்சொல்லித்திரிவாரோடு இணங்கவேண்டாம்
7. மண்ணளந்தான் தங்கையுமை மைந்தனெங்கோ
மயிலேறும் பெருமாளே வாழ்த்தாய் நெஞ்சே. [ன்

(ப-ரை) (1) மண்ணின்று - பூமியின்மேலிருந்துகொண்டு, மண்ணேரம்-நியாயவிரோதமாய், சொல்லவேண்டாம்-ஒன்றையும் சொல்லலாகாது.

(ப-ரை) (2) மனம்சலித்து-மனம் வெறுத்துக்கொண்டு, சிலுக்கு இட்டு-அதனால் பகையுண்டுபண்ணி, அலையவேண்டாம்-திரியலாகாது.

(ப-ரை) (3) கண்ணழிவுசெய்து-சுபகாரியத்தைச் செய்யவிடாமல் தடுத்து, துயர்-அதனால் உண்டாகும் துன்பத்தை, காட்டவேண்டாம்-வீளைவிக்கலாகாது.

(ப-ரை) (4) காணுத - தான் நேரே காணுத, வார்த்தையை-(காரியங்களைப்பற்றிய)பேச்சுகளை, கட்டு உரைக்கவேண்டாம்-நேரே கண்டதுபோல் பேசலாகாது.

(ப-ரை) (5) புண்படவே-கேட்கின்றவர் மனம் வருந்தும்படியாக, வார்த்தைகளை - சொற்களை, சொல்லவேண்டாம் - சொல்லலாகாது.

(ப-ரை) (6) புறஞ்சொல்லி - அதிகணமாய்ப் பேசிக்கொண்டு, திரிவாரோடு-அலைகின்றவருடன், இணங்கவேண்டாம்-சேரலாகாது.

(ப-ரை) (7) மண் அளந்தான்-உலகம் முழுதையும் தன் திருவடிகளால் அளந்தவனுகிய திருமாலின், தங்கை உமை - தங்கையாகிய பார்வதியம்மிக்கு, மைந்தன்-குமாரனும், எம்கோன்-எமக்குத் தலைவனுமாகிய, மயிலேறும் பெருமாளே - மயில வாகனமாய்க் கொண்ட முருகனே, நெஞ்சே ஏ! மனமே, வாழ்த்தாய்-வணங்குவாயாக.

(க-ரை) மனதே! நியாயவிரோதமாய்ப் பேசாதே. எல்லோரையும் விரோதித்துக்கொள்ளாதே. சுபகாரியத்தைக் கெடுக்காதே. காணுத விஷயத்தைக்குறித்துப்பேசாதே. பிறர்வருந்தும்படி பேசாதே. புறங்கூறாதே. முருகனை வணங்கு.

(10) 1. மறம்பேசித் திரிவாரோ டிணங்க் வேண்டாம்
2. வாதாடி வழக்கழிவு செய்ய வேண்டாம்
3. திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
4. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
5. இறந்தாலும்பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
6. ஏசலிட்ட உற்றுரை நத்த வேண்டாம்
7. குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறுய் நெஞ்சே.

(ப-ரை) (1) மறம்-தனது வீரத்தனத்தை, பேசி-வீணுய்ப் பேசிக்கொண்டு, திரிவாரோடு-திரிகின்றவருடன், இணங்கவேண்டாம்-சேரலாகாது.

(ப-ரை) (2) வாதாடி-வீண்வாதஞ்செய்து, வழக்கு அழிவு-தன் வழக்குத் தோற்றுப்போகும்படி, செய்யவேண்டாம்-செய்யலாகாது.

(ப-ரை) (3) திறம்பேசி-தனது வீரத்தை (விஸ்தாரமாய்) சொல்லி, கலகமிட்டு-சண்டையிட்டு, திரியவேண்டாம்-அலையக்கூடாது.

(ப-ரை) (4) தெய்வத்தை-உன்னைக் காக்கின்ற கடவுளை, ஒரு நாளும்-எப்பொழுதும், மறக்கவேண்டாம்-மறக்கலாகாது.

(ப-ரை) (5) இறந்தாலும் - (உண்மை சொல்லுவதால்) உயிர் போகுமாயினும், பொய்தன்னை - உண்மையில்லாத விஷயத்தை, சொல்லவேண்டாம்-சொல்லலாகாது.

(ப-ரை) (6) ஏசலிட்ட-தாழ்வாகப் பேசுகிற, உற்றுரை-சுற்றத்தார்களை, நத்தவேண்டாம்-விரும்பலாகாது.

(ப-ரை) (7) குறம்பேசி-(தன்னையடுத்துக்கேட்பவருக்கு) குறி சொல்லிக்கொண்டு, வாழ்கின்ற-இருக்கிற, வள்ளிபங்கன்-வள்ளியம்மையாரின் நாயகனுகிய,குமரவேல் முருகக்கடவுளது,நாமத்தை-திருநாமங்களை, நெஞ்சே-ஏ மனமே! கூறுய்-சொல்லுவாயாக.

(க-ரை) மனதே! வீரம்பேசுபவரிடம் கூடாதே. வீண் வழக்குச் செய்யாதே. உன் தைரியத்தைப் புகழாதே. தெய்வத்தை மறக்காதே. எப்பொழுதும் உண்மையைப் பேசு. மதியாத சுற்றத்தார் வீட்டிற்குச் செல்லாதே. குமரன் நாமத்தையே கூறு.

(11) 1. அஞ்சுபேர் கூலியைக்கைக் கொள்ளவேண்டாம்
2. அதுஎதிங் கென்னில் நீ சொல்லக் கேளாய்
3. தஞ்சமுடன் வண்ணன் நாவிதன் கூலி
4. சகலகலே ஓதுவித்த வாத்தியார் கூலி
5. வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
6. மகாநோவு தீனத்தீர்த்த மருத்துவன் கூலி
7. இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானே ஏமன் தானே.

(ப-ரை) (1) அஞ்சுபேர்- ஐவர்களுடைய, கூலியை- கூலியை, கைக்கொள்ள வேண்டாம்- கொடாமல் வைத்துக் கொள்ளலாகாது.

(ப-ரை) (2) இங்கு- இவ்வுலகத்தில், அது எது என்னில்-அது யாது என அறிய விரும்பினால், சொல்ல- யான் சொல்லுகிறதை, நீ கேளாய்-நீகேட்பாயாக.

(ப-ரை) (3) தஞ்சமுடன்-பனிவோடு உன்னடைகளை, வெளுத்துக்கொடுத்த, வண்ணன் கூலி- வண்ணனுக்குக் கொடுக்க வேண்டிய கூலி ஒன்றும், நாவிதன்- உனக்கு க்ஷவரம் செய்த அம்பட்டனுக்குக் கொடுக்கவேண்டிய, கூலி-கூலி ஒன்றும்.

(ப-ரை) (4) சகலகலே- பலவிதமான சாத்திரங்களையும், ஓதுவித்த-படிக்கும்படிசெய்த, வாத்தியார்கூலி- குருவிற்குக் கொடுக்க வேண்டிய கூலி ஒன்றும்.

(ப-ரை) (5) வஞ்சம்அற-வஞ்சகம் இல்லாமல், நஞ்சு-நஞ்சங் கொடியை, அறுத்த-துண்டாக்கிய, மருத்துவச்சி கூலி-மருத்துவச்சிக்குக் கொடுக்கும் கூலி ஒன்றும்.

(ப-ரை) (6) மகாநோவு- பெரிய வியாதியை, தீர்த்த-நீக்கின, மருத்துவன் கூலி-வயித்தியனுக்குக் கொடுக்கும் கூலி ஒன்றும்.

(ப-ரை) (7) இவர் கூலி - இவர்களுடைய கூலிப் பணத்தை, இன் சொலுடன்- இனிமை நிறைந்த வார்த்தைகளோடு, கொடாத பேரை- கொடுக்காதவர்களை, ஏமன்-இயமன், எதுஎதுசெய்வானே- யாது யாது செய்வானே நாம் அறியோம்.

(க-ரை) மேற்கூறிய ஐவர்களுடைய கூலிப்பணத்தை அவ்வப் பொழுதே கொடுக்க வேண்டும்.

(12) 1. கூருக்கி ஒருகுடியைக் கெடுக்க வேண்டாம்
2. கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
3. தூருக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
4. துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்
5. வீறுன தெய்வத்தை இகழ வேண்டாம்
6. வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
7. மாறுன குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானே வாழ்த்தாய் நெஞ்சே.

(ப-ரை) (1) ஒருகுடியை- எகுடும்பமாயிருப்பவரை, கூறு ஆக்கி-வேறுபிரித்து, கெடுத்துவிடலாகாது.

(ப-ரை) (2) கொண்டைமேல்- முடியின்மேல், பூத்தேடி- நல்லமலர்களேச்சேகரித்து,முடிக்கவேண்டாம்-அலங்கரித்தலாகாது.

(ப-ரை) (3) தூறுஆக்கி- தன் சொத்துக்களைப் பாழாக்கி, தலை யிட்டு-தானும் கெடுதியடைந்து, திரிய வேண்டாம்- வீணே அலைய லாகாது.

(ப-ரை) (4) துர்ச்சனராய்- கெட்டவராய், திரிவாரோடு-அலை கின்றவருடன், இணங்க வேண்டாம்- சேரலாகாது.

(ப-ரை) (5) வீறு ஆன-பெருமையோடு கூடிய, தெய்வத்தை- கடவுளை, இகழ வேண்டாம்- இகழ்ச்சியாய்ப் பேசாதே.

(ப-ரை) (6) வெற்றி உள்ள - ஜயத்தோடு கூடிய, பெரி யோரை- கல்வியறிவில் மிகுந்தவரை, வெறுக்க வேண்டாம்-வெறுத் துப் பேசி விரோதிக்காதே.

(ப-ரை) (7) மாறுஆன- பெண்களில் எல்லாம் அழகு நிறைந்த, குறவர்உடை- குறவாது பெண்ணுகிய, வள்ளி பங்கன்- வள்ளியம் மையார் நாயகனுகிய, மயிலேறும் பெருமானே- மயிலேவாகனமாய்க் கொண்ட முருகனே, நெஞ்சே-ஏ மனமே, வாழ்த்தாய்- வணங்கு வாயாக.

(க-ரை) மனமே! எகுடும்பத்தைக் கலைக்காதே. உன்னே பூவி ஞல் அலங்கரித்துக்கொள்ளாதே. பழியான சொற்களோட பேசாதே. கெட்டவரோடு சேராதே. தெய்வத்தை இகழாதே. பெரியவரை வெ றுத்துப் பேசாதே. குமரன் வணங்கு என்பதாம்.

(13) 1. ஆதரித்துப் பலவகையால் பொருளும் தேடி
2. அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
3. ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
4. உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
5. காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
6. கருத்துடனே நாடோறும் களிப்பினோடு
7. போதமுற்று மிகவாழ்ந்து புகழும் தேடிப்
பூலோகம் உள்ளளவும் வாழ்வார் தாமே.

(ப-ரை) (1) ஆதரித்து - விருப்பத்துடன், பலவகையால்-பல விதமான வழிகளால், பொருளும்தேடி - திரவியத்தைச் சேகரித்து, அருந்தமிழால்-இனிமைபொருந்திய தமிழ் மொழியால், அறுமுகனை-ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுளை, பாடவேண்டி - பாட வினைத்து, ஓதுவித்த - படிப்பிவித்த, வாசகத்தால் - மொழிகளைக் கொண்டு, உலகநாதன்-உலகநாதன் என்று கூறப்படுவோன், உண்மையாய்-மெய்மையாக, பாடிவைத்த-பாடி முடித்த, உலகநீதி-உலக நீதி என்னும் இந்நூலை, காதலித்து-விருப்பத்துடன், கற்றோரும் கேட்டபேரும்-படிப்பவர்களும் அதனைக் கேட்பவர்களும், நாள்தோறும்-சதாகாலமும், களிப்பினோடு-சந்தோஷத்துடன், போதமுற்று-ஞானத்தையடைந்து, மிகவாழ்ந்து-ஐசுவரியத்துடன் இருந்து, புகழும் தேடி-கீர்த்தியையும் சம்பாதித்து, பூலோகம் உள்ளளவும் - இவ்வுலகம் அழியும் வரையும், வாழ்வார்-வாழ்வார்கள்.

(க-ரை) உலகநாதன் திருவாய் மலர்ந்த இந்நூலைப் படிப்பவரும் கேட்பவரும் சுகவாழ்வோடு நீடு வாழ்வார்கள்.

(உலகநீதி மூலமும் உரையும்)

முற்றிற்று.

தமிழ்நாடு ... 18878

புதிய முறைப்படி எம்மால் வெளியிட்ட பிரதமபாடசாலைக்குரிய புத்தகங்கள்.

1.	ஆத்திசூடி மூலமும் உரையும்	0—0—9
2.	கொன்றைவேந்தன் மை.	0—0—9
3.	வெற்றிவேற்கை மை.	0—0—9
4.	உலகநீதி மை.	0—0—9
5.	வாக்குண்டாம் மை.	0—1—0
6.	நல்வழி மை.	0—1—0
7.	நன்னெறி மை.	0—1—0

மேற்கண்டபுத்தகங்கள் மாணவர்களுக்குத் தெளிவாய் உபயோகப்படும்படி பதவுரை, கருத்துரை, இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றைச் சேர்த்து எழுதப்பெற்றிருக்கின்றன.

நீதிக்கதைகள்.

மலர்.	1.	ஆத்திசூடி நீதிக்கதை	0—2—6
	2.	கொன்றை வேந்தன் மை.	0—3—0
	3.	வெற்றிவேற்கை மை.	0—3—0
	4.	உலகநீதி மை.	0—2—6

இவை டிய விரைவில் வெளிவரும்.

எஸ். ஆண்டியப்ப முதலியார்,
புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,
சோழவந்தான்.

Title page only Me[illegible]ni Press, Madu[illegible]